மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குமாரபாளையம்

<u>அ.வ.எண். 7/2020</u>

**நாள்– 04.07.2025**

**பி.வா.சா. 1 – திரு. வெங்கடேஸ்வரன்**

**<u>வாதி தரப்பின் குறுக்கு விசாரணை</u> :**

1) இந்த வழக்கின் இரண்டாம் பிரதிவாதி எனது தாயார். நான் அவரது அதிகார முகவராக சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். வாதி எனது தாயார் கிரையம் வாங்கிய சொத்துக்கு அருகில் நிலம் வைத்துள்ளார் என்றால் சரிதான். நான் வழக்குரைஞராகப் பணிபுரிகிறேன் என்றால் சரிதான். என்னுடைய தகப்பனார் முன்னாள் கிராம நிர்வாக அலுவலர் என்றால் சரிதான். அவர் 1984ம் ஆண்டிலிருந்து இதுநாள் வரை ஆவண எழுத்தராகப் பணியாற்றி வருகிறார் என்றால் சரிதான். பி.சா.ஆ–8 மற்றும் பி.சா.ஆ.14 ஆவணங்கள் எனது தந்தையால் ஆவண எழுத்தராக தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். வாதி இந்த வழக்கை எத்தனை அயிட்ட சொத்திற்காக தாக்கல் செய்துள்ளார் என்றால் 1 அயிட்ட சொத்திற்காக தாக்கல் செய்துள்ளார்.

2) எனது தாயார் கிரையம் வாங்கியதாக கூறும் சொத்தை யாரிடமிருந்து கிரையம் வாங்கினார் என்றால் தனபால் என்கிறவரிடமிருந்து கிரையம் வாங்கினார். எனது தாயார் கிரையம் வாங்கிய சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 1850 சதுர அடி ஆகும். மேற்படி சொத்தானது எந்த கிராமத்தில் எந்த சர்வே எண்ணில் அமைந்துள்ளது என்று தெரியுமா என்றால் தெரியும், குமாரபாளையம் கிராமம் சர்வே எண்.739/13B, 14B,15B ஆகும். நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலம் நான் சொல்லிதான் வழக்குரைஞரால் தயாரிக்கப்பட்டது. அதில் தாவா சொத்தைப் பொறுத்து திருச்செங்கோடு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண் 232/2013 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டது குறித்து சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அந்த வழக்கை வாதி ராமாயி யார் யார் மீது என்ன பரிகாரத்திற்காக தாக்கல் செய்தார் என்று தெரியுமா என்றால் தெரியும். என் தாயாருக்கு சொத்தைக் கிரையம் செய்து வைத்த தனபால் மற்றும் இதர நபர்கள் மீது சர்வே எண்.739ல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து என்னுடையது என்று விளம்புகைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்தார்.

3) அந்த வழக்கில் எத்தனை அயிட்ட சொத்திற்காக எவ்வளவு விஸ்தீரணம் உடைய சொத்திற்காக தாக்கல் செய்தார்கள் என்று தெரியுமா என்றால் சரியாக நினைவில்லை. அந்த வழக்கில் தனபால் தவிர உள்ள இதர பிரதிவாதிகளின் பெயர் தெரியுமா என்றால் நினைவில் இல்லை. அந்த வழக்கில் எனது தாயார் வழக்கு தரப்பினர் இல்லை என்றால் சரிதான். ஆனால் இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி தனபால் அ.வ.எண்.232/2013 வழக்கின் தரப்பினர் ஆவர். தற்போதைய வழக்கின் 1ம் பிரதிவாதி தோன்றாத் தரப்பினராக அறிவிக்கப்பட்டு விட்டார் என்றால் சரிதான்.

**(வாதி தரப்பின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)**